**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 120/2023**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.09.2025 | தகப்பனார் பெயர்: | ராஜேந்திரன் |
| பெயர்: | ஸ்ரீகாந்த்<br>(PW–1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | வேட்டங்குடி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 33/2025 |

**முதல் விசாரணை : 01.09.2025**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 29.04.2023 தேதியிட்ட ராஜேந்திரன் என்பவரிடமிருந்து தாவா சொத்தை பொறுத்து நான் பெற்ற கிரயம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 17.06.2023 தேதியிட்ட நான் செலுத்திய வீட்டு வரி அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 21.06.2023 தேதியிட்ட நான் செலுத்திய வீட்டு வரி அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 30.05.2023 தேதியிட்ட காவல் துறையால் எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை சார்வு நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்

5. 20.01.2023 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்த வில்லங்கச் சான்றின் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.